**Crl.Misc.39**

**Chapter XXIII code of Criminal procedure**
**DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, SHOLINGANALLUR**
**DEPOSITION OF WITNESS**

| | | |
|---|---|---|
| **Calender** | : | |
| **Miscellaneous** | : | **CC.No.386/2024** |
| **Preliminary Register** | : | |
| **Police Station** | : | **Neelangarai PS** |
| **Deposition of witness for** | : | **LW4/PW4** |
| | : | |
| **Name** | : | **Kalaiselvi (Inspector of Police)** |
| | : | |
| **Village** | : | |
| **Taluk** | : | |
| **Caste** | : | |
| **Calling** | : | |
| **Religion** | : | |
| **Age** | : | |

**Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 16.10.2025**
**(எதிரி ஆஜர் , எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர்)**

முதல் விசாரணை **:**

1. நான் கடந்த 2023 ஆம் ஆண்டு மே மாதம் குரோம்பேட் காவல் நிலையத்தில் காவல் ஆய்வாளராக குற்ற பிரிவில் பணி செய்த பொழுது நான் விருப்ப ஓய்வு பெற்றுக் கொண்டேன். தற்பொழுது வீட்டில் இருந்து வருகிறேன். நான் கடந்த 18.06.2018 அன்று நீலாங்கரை காவல்நிலையத்தில் உதவி ஆய்வாளராக பணியில் இருந்த பொழுது திருமதி வளர்மதி, வயது 42, கணவர் பெயர் ராமலிங்கம் அவர்கள் நிலையம் ஆஜராகி எழுத்து மூலமாக கொடுத்த புகாரை பெற்றுக்கொண்டு நிலைய குற்ற எண் 876/2018

சட்டப்பிரிவு 380 IPC இன் கீழ் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்தேன். அந்த முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ 2 ஆக குறியீடு செய்யப்படுகிறது.

2. நான் உடனடியாக சம்பவ இடம் சென்று சம்பவ இடத்தில் புகார்தாரரின் மகன்கள் எதிரியை பிடித்து வைத்துக் கொண்டிருந்தனர். அவர் கையில் மயில் கொண்டை கொண்ட இரண்டு பித்தளை சுமார் 1 அடி உயரமுள்ள குத்துவிளக்கு இரண்டு மற்றும் நாலு இன்ச் உயரம் கொண்ட பித்தளை காமாட்சி அம்மன் விளக்கு ஒன்று இருந்தது. அதன் பின்பு சாட்சிகள் விக்னேஷ் மற்றும் விஜயகுமார் முன்னிலையில் எதிரியிடமிருந்து ஒப்புதல் வாக்குமூலம் பெற்று எதிரிடமிருந்த குத்து விளக்குகளை புகார்தாரர் திருமதி வளர்மதி தனது வீட்டின் கிரகப்பிரவேசத்திற்கு தேவைப்படுவதால் தனது மத வழிபாடு காரணமாக கேட்டுக் கொண்டதற்கிணங்க அன்றைய தினமே எதிரியிடமிருந்து கைப்பற்றப்பட்ட குத்துவிளக்கை நிகழ்நிலை புகார்தாரர் திருமதி வளர்மதி இடம் ஒப்படைத்து விட்டேன். அந்த கைப்பற்றுதல் மகஜர் அ.சா.ஆ 3 ஆக குறியீடு செய்யப்படுகிறது.

3. புகார்தாரர் காவல் நிலையத்தில் தனது மத வழிபாட்டுக்காக கைப்பற்றப்பட்ட வழக்கு சொத்தை கேட்டுக் கொண்டதால் மேல் அதிகாரியின் ஒப்புதலை பெற்றுக் கொண்டு புகார்தாரரிடம் நீதிமன்றத்தில் கேட்கப்படும் பொழுது வழக்கு சொத்தை ஒப்படைப்பதாக எழுதி பெற்றுக்கொண்டு வழக்கு சொத்தை புகார்தாரிடம் ஒப்படைத்து விட்டேன். புகார்தாரர் எழுதிக் கொடுத்த கடிதம் அ.சா.ஆ 4 ஆக குறியீடு செய்யப்படுகிறது. பின்பு பட்டியல் சாட்சிகள் ஒன்று முதல் மூன்று வரை சாட்சிகளை தனித்தனியாக விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்தேன். பின்னர் எதிரியை நிலையம் அழைத்துச் சென்று கைதுக்கான காரணம் கூறி கைது செய்து பாரவசம் ஒப்படைத்து நீதிமன்ற வழி காவலுக்கு உட்படுத்தினேன். பின்னர் எனது விசாரணையை

முடித்து எதிரியின் மீது சட்ட பிரிவு 380 IPC என் கீழ் இறுதி அறிக்கை நீதிமன்றத்தில் தாக்கல் செய்தேன்.

எதிரி தரப்பு குறுக்கு விசாரணை

1. எனது இறுதி அறிக்கையில் அவசர எண் 100 க்கு யார் தகவல் கொடுத்தார் என்ற விவரத்தை தெரிவித்துள்ளனா என்றால் புகார் தாரரின் மகன் விஜயகுமார் தெரிவித்தார். இவ்வழக்கில் புகார்தாரர் மற்றும் அவரது மகன்களை தவிர வேற தனிப்பட்ட சாட்சி யாரையும் நான் விசாரணை செய்யவில்லை என்றால் சரிதான். நான் சம்பவ இடம் சென்று தான் விசாரணை செய்தேன். நான் சம்பவ இடத்தில் புகார்தாரர் மற்றும் அவரது மகன்களை வாய் மொழியாக விசாரணை செய்து பின்னர் காவல் நிலையத்தில் விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்தேன்.

2. நான் புகார்தாரரிடம் யாருடைய அனுமதியுடன் வழக்கு சொத்தை புகார்தாரரிடம் திருப்பி ஒப்படைத்தேன் என்றால் என்னுடைய மேல் அதிகாரியிடம் அனுமதி பெற்ற பின்பு தான் ஒப்படைத்தேன். அந்த அனுமதி பெற்றதற்கான விவரத்தை எனது இறுதி அறிக்கையில் குறிப்பிட்டுள்ளேன்னா என்றால் குறிப்பிடவில்லை. இந்த வழக்கில் சம்பவ இடத்தை மாதிரி வரைபடம் வரைந்தேனா என்றால் பொருளை கைப்பற்றி விட்டதால் எதிரியும் அங்கே இருந்ததால் மாதிரி வரைபடம் தேவையில்லாததால் வரையவில்லை. ஒப்புதல் வாக்குமூலத்திலும் கைப்பற்றுதல் மகசரிலும் சாட்சிகள் விக்னேஷ் மற்றும் விஜயகுமாரிடம் ஒரே நேரத்தில் கையொப்பம் பெற்றேன் என்றால் சரிதான்.

3. ஒப்புதல் வாக்குமூலத்தில் விஜயகுமாரின் கையெழுத்து ஆங்கிலத்திலும், கைப்பற்றுதல் மகஜரில் விஜயகுமாரின் கையெழுத்து தமிழிலும் உள்ளது என்றால் அவர் இரண்டு மொழியிலும் கையொப்பம் செய்தார். விக்னேஷ் மற்றும் விஜயகுமாரின் 161

வாக்குமூலத்தில் நானும் எனது சகோதரரும் ஒப்புதல் வாக்குமூலத்தில் கையொப்பம் செய்தோம் என்று மட்டும் தான் குறிப்பிட்டார். கைப்பற்றுதல் மகசரில் கையொப்பம் செய்தோம் என்று குறிப்பிடவில்லை என்றால் சரிதான். புகார் தாரரிடம் இருந்து பொய்யான புகாரை பெற்று நான் சரிவர விசாரணை செய்யாமல் எதிரியின் மீது பொய்யாக வழக்கு பதிவு செய்ததால் தான் வழக்கு சொத்தை நீதிமன்றத்தில் ஒப்படைக்கவில்லை என்றாலும் எதிரிக்கும் இந்த வழக்கிற்கும் சம்பந்தமில்லை என்றால் சரியல்ல.

4. புகார்தாரர் காவல் நிலையத்தில் தான் வழக்கு சொத்தை பெற்றுக் கொண்டதாகவும் தேவைப்படும் பட்சத்தில் நீதிமன்றத்தில் ஒப்படைப்பதாக எழுதிக் கொடுத்துவிட்டு வழக்கு சொத்தை மத வழிபாட்டிற்காக பெற்றுக் கொண்டார். இந்த வழக்கு எதிரியின் மீது போடப்பட்ட பொய் வழக்கு என்பதால் தான் புகார்தாரர் மற்றும் அவர்களது மகன்களை மட்டும் விசாரணை செய்து வேறு தனிப்பட்ட சாட்சிகளை யாரையும் விசாரணை செய்யவில்லை என்றால் சரியல்ல. எதிர்க்கும் இந்த வழக்கிற்கும் சம்பந்தம் இல்லை என்றால் சரியல்ல.

**<u>மறுவிசாரணை :</u>** இல்லை

Sd/-M.N.ராஜநந்திவர்மசிவா
மாவட்ட உரிமையியல் மற்றும்
குற்றவியல் நடுவர்,
சோழிங்கநல்லூர்.